**சுருக்கம்**

மாற்றுத் திறனாளிகள் நலத் துறை - 10 அரசு மறுவாழ்வு இல்லங்களில் வசிக்கும் தொழுநோயால் பாதிக்கப்பட்ட 614 இல்லவாசிகள் - காலணிகள் வாங்கி வழங்கும் திட்டம் - 2022-2023ஆம் நிதியாண்டில் செலவினம் மேற்கொள்ள அனுமதி அளித்து - ஆணை- வெளியிடப்படுகிறது.

---

**மாற்றுத் திறனாளிகள் நல (மா.தி.ந-1)த் துறை**

அரசாணை (நிலை) எண் 8

நாள்: 19 .05.2022
சுபகிருது, வைகாசி- 5
திருவள்ளுவர் ஆண்டு, 2053.

படிக்கப்பட்டது:

1. அரசாணை (நிலை) எண் 39, மாற்றுத் திறனாளிகள் நலத் (மாதிந-1) துறை , நாள் 12.10.2017.
2. மாற்றுத் திறனாளிகள் நல இயக்குநரின் கடித ந.க. எண் 5720/ம.இ..நிர்.3/2021, நாள் 06.10.2021, 20.10.2021 மற்றும் 26.10.2021.

-----

**ஆணை:**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், 10 அரசு மறுவாழ்வு இல்லங்களில் தங்கியுள்ள தொழுநோயால் பாதிக்கப்பட்ட இல்லவாசிகளின் நலனைக் கருத்தில் கொண்டு, 2017-2018ஆம் நிதியாண்டில் காலணிகள் வழங்கும் திட்டத்தினைத் தொடர, திட்டத் தொடராணையும், இச்செலவினத்திற்கென ஒரு ஜோடி காலணியின் விலை ரூ.375/- வீதம் 870 இல்லவாசிகளுக்கு MCR காலணிகள் வாங்கி வழங்கிட, ரூ.3,26,250/-க்கு நிதி ஒப்பளிப்பு வழங்கியும் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், மாற்றுத் திறனாளிகள் நல இயக்குநர் 2021-2022ஆம் நிதியாண்டில், 10 அரசு மறுவாழ்வு இல்லங்களில் தங்கியுள்ள 614 இல்லவாசிகளுக்கு, ரூ.550/- வீதம் MCR காலணிகள் வாங்கி வழங்கிட, ரூ.3,37,370/-னை 2021-2022ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்டத்தில் 2235-02-104-AI-324 01 – பொருள்களும் வழங்கலும் என்ற கணக்குத் தலைப்பின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகையிலிருந்து செலவுகள் மேற்கொள்ள அனுமதி ஆணை வழங்குமாறு அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

3. மாற்றுத் திறனாளிகள் நல இயக்குநரின் கருத்துருவினை ஆய்வு செய்த அரசு, அதனை ஏற்று, 10 அரசு மறுவாழ்வு இல்லங்களில் தங்கியுள்ள 614

(த.பி.பா.)

தொழுநோயால் பாதிக்கப்பட்ட இல்லவாசிகளுக்கு 2022-2023ஆம் ஆண்டில் MCR காலணிகள் வாங்கி வழங்கிட, ரூ.3,37,700/- (ரூபாய் மூன்று இலட்சத்து முப்பத்தேழாயிரத்து எழுநூறு மட்டும்) ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி-3ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படும்:-

"2235-சமூகப் பாதுகாப்பும் நலனும்-02 – சமூக நலன்-104 – முதியோர் இயலாமையுற்றோர் மற்றும் ஆதரவற்றோர் நலன் – மாநிலச் செலவினங்கள்-AI – தொழுநோய் பிச்சைக்காரர்களுக்கான மறுவாழ்வு இல்லம் – 324 – பொருள்களும் வழங்கலும் 01 – பொருள்களும் வழங்கலும் (IFHRMS 01- த.தொ.கு.2235-02-104-AI-32401)

5. இவ்வாணை நிதித் துறையின் அலுவல்சாரா எண் 21412/நிதி(சந)/2022, நாள் 16.05.2022-ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஆர். லால்வேனா,
அரசு செயலாளர்.

பெறுநர்

மாற்றுத் திறனாளிகள் நல இயக்குநர், சென்னை-5.
மாநிலக் கணக்காயர் (A&E), சென்னை-18.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை-35.
அரசு மறுவாழ்வு இல்லங்கள், விண்ணப்பள்ளி / பரனூர் /
உளுந்தூர்பேட்டை / செல்லியம்பட்டி / மல்லவாடி / தேவியாக்குறிச்சி /
மணையேறிப்பட்டி / யா.புதுப்பட்டி / பர்கூர் / புதுக்கோட்டை.
(மாற்றுத் திறனாளிகள் நல இயக்குநர் வழியாக)
இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை-9.

நகல்:

நிதி (ச.ந)த் துறை, சென்னை-9.
அரசு செயலரின் முதுநிலை முதன்மைத் தனிச் செயலாளர்,
மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, சென்னை-9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்
19/5/22
19/05/22